பள்ளிக் கல்வித்துறைக்காக
வெளியீடு:
தமிழ்நாடு பாடநூல்
மற்றும் கல்வியியல்
பணிகள் கழகம்

# தேன்சிட்டு

THEN CHITTU ★
FORTNIGHTLY ★

உலக அறிவுக்குத் தமிழ்ச் சாளரம்

6-9
வகுப்புகளுக்கான
மாதமிருமுறை இதழ்

- 01-15 ஆகஸ்ட் 2024
- சிட்டு 3 ★ இதழ் 41
- விலை : ரூ. 20/-
- சென்னை

- 01-15 AUGUST 2024
- Chittu 3 ★ Issue 41
- Price : Rs. 20/-
- Chennai



## வீரத்தின் அடையாளம்

வரலாற்றைத்
தெரிந்துகொள்ள
21ஆம் பக்கம்
வாங்க...






ஐஸ்கிரீம் மரம் 04


சோம்பல் முறிக்கும் சிலந்தி 10


வியக்க வைக்கும் விண்வெளி 20 →


# WORD PUZZLE GAME






| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| M | A | R | E | M | A | C | N | F | S |
| Q | W | Y | P | T | C | K | A | K | Q |
| X | V | B | T | E | W | N | K | X | L |
| T | E | L | E | P | H | O | N | E | J |
| E | N | O | H | P | O | R | C | I | M |
| Z | B | S | M | L | H | Z | H | A | M |
| N | O | I | S | I | V | E | L | E | T |
| O | K | E | T | M | O | I | D | A | R |
| T | K | C | O | L | C | R | L | K | Z |
| V | S | M | G | K | S | L | G | Z | C |









விடைகள்: 20ஆம் பக்கம்

அரசுப் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை ஒவ்வொரு வகுப்பறைக்கும் ஒரு தேன்சிட்டு இதழ்!

# சுதந்திரக் கொடி வணக்கம்!



அன்னை விலங்கு முறிந்ததே!
அடிமை வாழ்வும் அகன்றதே!
என்றே எண்ணி நாமுமே
இன்று பெருமை அடைகிறோம்.
சாந்தப் போரின் சக்தியை
தருமப் போரின் வெற்றியை
காந்தி சொன்ன வழியிலே
கண்டோம் நமது நாளிலே!
மக்களுக்கு மக்களால்
மக்கள் ஆளும் நாட்டிலே
தக்க முறையில் வாழ்வோம்;
தலை நிமிர்ந்து சொல்லுவோம்.
ஆட்டம் ஆடி மகிழுவோம்;
பாட்டுப் பாடிப் புகழுவோம்
கூட்டம் கூட்டமாகவே
கொடி வணக்கம் செய்குவோம்!

– அழ. வள்ளியப்பா
('சுதந்திரம் பிறந்த கதை' நூலில் இருந்து)

5 அறிவை விரிவு செய்யும் இலக்கிய வாசிப்பு


8 தூண்டில்


14 மரங்களில் இலைகள் வந்த கதை


18 தயாரா? ஆம்! விளையாடு!


22 சுவையான பொன்னாங்கண்ணிக் கீரை


தேன்சிட்டு
Then Chittu Fortnightly

- 01 - 15 ஆகஸ்ட் 2024
- சிட்டு 3 ★ இதழ் 41
- 01 - 15 AUGUST 2024
- Chittu 3 ★ Issue 41

***
பதிப்பாளர் / ஆசிரியர் :
செ. அமுதவல்லி
***
பொறுப்பாசிரியர் :
யெஸ். பாலபாரதி
***

***
இணையாசிரியர்கள்:
விஷ்ணுபுரம் சரவணன்,
பொன். மூர்த்தி
***
ஆசிரியர் குழு:
இரா. அருண்பாண்டியன்,
பி. சுகுணாதேவி, வி.விஜயகுமார்,
து. மலர்விழி ஜூலியட்
***

***
வடிவமைப்பாளர்கள்:
எஸ். சீனிவாசராவ்,
பி. வன்மிகநாதன், பூ. சேஷாத்ரி
***
அச்சிட்டோர் :
பா. ராஜ்குமார்
***

படைப்புகள் அனுப்ப : thenchittu@tnschools.gov.in ❖ சந்தா குறித்த தகவல்களுக்கு : magazine.subscription@tnschools.gov.in

பதிப்பகம்: தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம். ஈ.வெ.கி. சம்பத் மாளிகை, எண் 68, கல்லூரிச்சாலை, சென்னை - 600 006
அச்சகம் : ராசி கிராபிக்ஸ் பிரைவேட் லிமிடெட், 69-71/A சிட்கோ தொழிற்பேட்டை, திருமழிசை, திருவள்ளூர் மாவட்டம், அஞ்சல் எண் - 600 124.

# ஐஸ்கிரீம் மரம்

மீனா ஏழாம் வகுப்பு மாணவி. ஒரு நாள் மதியம், கடைக்குச் சென்று வீட்டுக்குத் திரும்பிக் கொண்டு இருந்தாள். வெயில் சுட்டு எரித்தது. வழியில் ஒரு ஐஸ்கிரீம் கடை இருந்தது. ஐஸ்கிரீம் வாசனை காற்றில் கலந்து வந்தது. நாக்கில் எச்சில் ஊறியது.

அவள் அம்மா காய்கறி வாங்கி வரக் கொடுத்த ஐம்பது ரூபாய் பையில் இருந்தது. 'அந்தப் பணத்தில் ஐஸ்கிரீம் வாங்கலாமா?' என யோசித்தாள்.

'அம்மா கோபப்படுவாரே' என்று தயங்கினாள். ஆனால் ஐஸ்கிரீம் வாசனை, வாங்கத் தூண்டியது. கடைக்குப் போய், ஒரு சாக்லெட் ஐஸ்கிரீம் கப் வாங்கினாள். அதன் மேல் ஒரு செர்ரி பழம் இருந்தது.

ஆசையாக அதைத் தின்னப் போனாள். அது வழுக்கிக்கொண்டு கீழே விழுந்தது. தூசியானதால் அதை விட்டுவிட்டு, ஐஸ்கிரீமைத் தின்றாள்.

வீட்டுக்குக் கிளம்பும் முன், அந்தச் செர்ரி பழம் கண்ணில் பட்டது. அது பளபளவென்று ஜொலித்தது. சிவப்பு கோலி குண்டு போல் இருந்ததை எடுத்துத் தூசியைத் துடைத்தாள். வீட்டுக்கு எடுத்து வந்தாள்.

அம்மாவிடம் ஐஸ்கிரீம் வாங்கியதைச் சொன்னாள். வழக்கமாகத் திட்டும் அம்மா, அன்று ஏனோ திட்டவில்லை. அவளுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

'வீட்டில் செர்ரி மரம் இருந்தால் தினமும் பழம் தின்னலாமே' என்ற ஆசையில், கொல்லைக்குப் போனாள்.

மண்ணில் ஒரு சிறிய குழி தோண்டி, அந்தப் பழத்தைப் போட்டாள். என்ன ஆச்சரியம். மறுநாளே அந்த இடத்தில், ஒரு செடி முளைத்தது. கிடுகிடுவென்று வளர்ந்தது.

ஓர் ஆண்டில் பழங்கள் பழுக்கத் தொடங்கின. ஆப்பிள், செர்ரி, மாம்பழம் என ஒவ்வொரு கிளையில் ஒவ்வொரு விதமான பழங்கள்.

அவற்றின் வடிவம்தான் பழம். உள்ளே ஐஸ்கிரீம்.

அவள் ஆசை தீர, ஒவ்வொரு ஐஸ்கிரீம் பழமாகப் பறித்துச் சாப்பிட்டாள். அவள் அப்பா ஒரு ஐஸ்கிரீம் கடை வைத்து, விற்பனை செய்தார். அது ஐஸ்கிரீம் மரம் என்பதை யாருக்கும் சொல்லாமல் இரகசியமாகப் பாதுகாத்தனர். எப்படியோ அந்தச் செய்தி ஊர் முழுக்கப் பரவிவிட்டது.

அந்த மரம் தங்களுக்கு வேண்டும் என்று அந்த ஊர் மக்கள் ஆசைப்பட்டனர். மீனாவுக்கு அந்தச் செய்தி தெரிந்தது.

கொல்லைப்பக்கம் முள் வேலி தான் போடப்பட்டிருந்தது. வீட்டில் ஆள் இல்லாத சமயத்தில் வேலியை அகற்றி, மரத்தைப் பெயர்த்து எடுப்பது எளிது. அவர்களிடம் இருந்து மரத்தைக் காப்பாற்ற வேண்டுமே என்று அவளுக்கு ஓயாத கவலை.

ஒரு நாள் இரவு அவள் கனவில் அந்தச் செர்ரி பழம் வந்தது. சிவப்பு நிறத்தில் பளபள என்று ஜொலித்தது.

"உனக்கு என்ன கவலை?" என்று செர்ரி பழம் கேட்டது.

"என் மரத்தை எப்படியாவது ஊர் மக்களிடம் இருந்து காப்பாற்ற வேண்டும். அதற்கு என்ன வழி?" மீனா கேட்டாள்.

"ஒரு வரம் தருகிறேன். அதை வைத்து நீ மரத்தைக் காப்பாற்றிக் கொள்" என்றது செர்ரி பழம்.

"எங்கள் வீட்டினரைத் தவிர வேறு யார் கண்ணுக்கும் மரம் தெரியக் கூடாது" என்று வரம் கேட்டாள் மீனா.

"அப்படியே ஆகட்டும்" என்றது பழம்.

மீனா விழித்தவுடன், தான் கண்டது கனவா, நனவா என்று குழம்பினாள்.

அடுத்த நாள், பக்கத்து ஊரில் உறவினர் வீட்டுத் திருமணம். மீனாவும் பெற்றோரும் வீட்டைப் பூட்டி விட்டுச் சென்றனர்.

'இது தான் சமயம்' என்று பக்கத்து வீட்டுக்காரர் வேலியை அகற்றினார். மரத்தை அடியோடு பெயர்த்து எடுக்க, ஒரு கிரேனைக் கொண்டு வந்தார்.


வந்தவருக்கு அதிர்ச்சி. 'இங்கே இருந்த மரம் எங்கே?' என்று சுற்றிலும் தேடினார். மரத்தைக் காணோம். ஏமாற்றத்துடன் திரும்பினார்.

அன்று மாலை, மீனா பெற்றோருடன் வீட்டுக்குத் திரும்பினாள்.

வேலி இல்லாமல் கொல்லை திறந்து கிடந்தது. ஆனால் மரம் பத்திரமாக இருந்தது.

மீனாவுக்கு மகிழ்ச்சியோ மகிழ்ச்சி.

- ஞா. கலையரசி



# அறிவை விரிவு செய்யும் இலக்கிய வாசிப்பு

குழந்தைகளுக்காக அழகான பாடல்களை எழுதிப் புகழ்பெற்றவர் அழ.வள்ளியப்பா. அவரின் மகளான தேவி நாச்சியப்பனும் சிறுவர்களுக்காகப் பல படைப்புகளை எழுதி வருகிறார். பல்வேறு விருதுகளையும் பெற்றுள்ளார். அவரோடு உரையாடினோம்.

### ? உங்கள் தந்தை எழுத்தாளர் என்பதால் சின்ன வயதில் இருந்தே புத்தகங்கள் வாசிக்கும் பழக்கம் வந்துவிட்டதா?

ஆமாம். எனது தந்தை குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா குழந்தைகளுக்கு எழுதுபவர்களை ஊக்கப்படுத்தியவர். குழந்தை எழுத்தாளர் சங்கத்தை நான் பிறப்பதற்கு முன்பே தொடங்கியவர். எழுத்தாளர்கள் கதை சொல்லும் நிகழ்ச்சி எங்கள் வீட்டில் ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெறும். அப்போது சொல்லப்பட்ட கதைகளையும் பாடல்களையும் கேட்டபடியே வளர்ந்தேன். வீட்டிலேயே குழந்தைகளுக்கான நூல்கள் ஏராளமாக இருந்ததால், வாசிக்கத் தெரிந்த நாளில் இருந்தே கதைகளை வாசிக்கத் தொடங்கினேன்.

### ? நீங்கள் படித்ததில் மறக்கவே முடியாத கதை எது?

நான் பள்ளி மாணவியாக இருந்தபோது என் தந்தையார் 'கோகுலம்' எனும் இதழில் 'நீலா மாலா' என்ற தொடர்கதையை எழுதினார். அக்கதையில் வரும் சம்பவங்களில் 'அடுத்து என்ன ஆகுமோ?' என்ற ஆவலைத் தூண்டியது. தோழிகளெல்லாம் அடுத்த நிகழ்வுகளைப் பற்றிக் கேட்கையில் 'நீங்கள் சொல்லுங்கள்' என்று அவர்களின் கற்பனை குதிரையை ஓட வைத்து வேடிக்கை பார்த்தது மறக்க முடியாத நிகழ்வு.

### ? கதை எழுதுவதற்கான கரு எங்கிருந்து கிடைக்கிறது?

நீரில் மூழ்கி முத்துக் குளிக்கையில் தான் முத்தெடுக்க முடியும் என்பது போல, குழந்தைகளோடு குழந்தையாகப் பழகும்போதுதான் கதைக்கான கரு கிடைக்கிறது. பள்ளி ஆசிரியராக, கவிமணி குழந்தைகள் சங்க அமைப்பாளராக, தாயாக, சித்தியாக, அத்தையாக, பாட்டியாக, கதாசிரியராகக் குழந்தைகளுடன் பேசிப் பழகும் போதும் அவர்களின் உரையாடலை அவர்கள் அறியாமல் இரசிக்கும் போதும் கருக்கள் கிடைக்கின்றன. நடந்தவை + (நடக்க வேண்டுமென்ற) கற்பனை = கதை.


### ? சிறுவர்களுக்கு என நீங்கள் எழுதிய முதல் படைப்பு எது?

நான் எட்டாம் வகுப்புப் படிக்கும்போது எங்கள் தந்தையார், கவிமணி குழந்தைகள் சங்கத்தைத் தொடங்கினார். என்னை அமைப்பாளராக இருந்து நடத்தச் சொன்னார். அப்போது நடந்த சங்க ஆண்டு விழாவில் கவியரங்கம் நடந்தது. அதில் 'குறும்புப் பையன்' என்ற தலைப்பில் முதல் கவிதையைப் பாடி பலரின் பாராட்டைப் பெற்றேன்.

### ? மாணவர்களாக இருக்கும்போதே புதிய படைப்புகள் படைக்க முடியுமா?

நிச்சயமாக முடியும். தெளிவான கருத்தும், விரிந்த கற்பனையும், பிழையின்றி எழுதும் மொழி நடையும் பெற்ற மாணவர்கள் சிறந்த, புதிய கதைகளைப் படைக்கலாம். மாணவர்கள் பலவிதமான நூல்களைப் படிக்க வேண்டும். ஆனால் அந்நூலின் கருத்துகளையோ, சாயலையோ, பின்பற்றாமல் எழுதிப் பழக வேண்டும்.

### ? நீங்கள் எழுதிய நூல்கள் / பெற்ற விருதுகள்?




சிறுகதை நூல்கள், பட்டிமன்றம், பயண நூல், வாழ்க்கை வரலாறு என்பவற்றுடன் முனைவர் பட்ட ஆய்வான 'குழந்தை இலக்கியப் பாடல்களில் உத்திகள்' என 23 நூல்களுடன் அச்சில் 2 நூல்களும் உள்ளன. பேசியது கைபேசி, பசுமைப்படை, மாணவர் பட்டிமன்றம், குழந்தைகள் சென்ற குஷியான பயணம் போன்ற சில நூல்கள் பிரபலமான அமைப்புகளின் பரிசுகளையும் பெற்றுள்ளன. குழந்தை இலக்கியப் பங்களிப்பிற்காக 'பால சாகித்திய புரஸ்கார்' விருதும், சென்னை கம்பன் கழகம், சென்னைப் புத்தகக் காட்சி (பபாஸி) விருதுகளும் கிடைத்தன. இவை தவிர மாநில நல்லாசிரியர், தமிழ்ச் செம்மல் விருதுகளும் கிடைத்துள்ளன.

-தேவி நாச்சியப்பன்




### ? மாணவர்கள் பாட நூல்களைக் கடந்தும் இலக்கிய நூல்களை ஏன் வாசிக்க வேண்டும்?

"அறிவை விரிவு செய். அகண்டமாக்கு" என்றார் பாவேந்தர். அதற்கான ஒரே வழி மாணவர்கள் இலக்கியங்களை வாசிப்பதுதான். அப்போதுதான் வாசிப்பின் பயனை உணர முடியும். பல வகைக் கதைகள், பாடல்களைப் படிக்கும்போது, அறிவு, பண்பு, கற்பனை, படைப்பாற்றல் அனைத்தும் வளரும். பெரியவர்களானதும் தொடர்ந்து வாசிப்பில் நாட்டமுடையவர்களாக இருப்பார்கள்.

# சங்ககாலப் பறவைகள்


சங்க இலக்கியம் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த தமிழர் வாழ்க்கையைப் பதிவு செய்த அற்புத படைப்பு. சங்க இலக்கிய நூல்களில் இடம்பெறும் பறவைகளில் சிலவற்றைப் பார்ப்போம்.



**அசுணம்** - சங்க காலப் பாடல்களில் அசுணமா என அறியப்படும் இப்பறவை; இசையை உணரக்கூடியது. இசைக்கு மயங்கும் தன்மை உடையது. இதை வேட்டையாட மனதை மயக்கும் இசையை வாசிப்பார்களாம். விலங்கும் பறவையும் கலந்தது போல தோற்றமளிக்கும்.

**புறவு** - சங்க காலப் பாடல்களில் புறாவை புறவு என குறிப்பிடுகின்றனர். இது முல்லை நிலத்தின் பறவை ஆகும்.





**இருதலைப்புள்** - அகநானூறு பாடலில் இப்பறவையின் பெயர் இடம்பெற்றுள்ளது. இது இரண்டு தலைகளைக் கொண்ட பறவை. வலிமையின் அடையாளமாகக் கருதப்படுகிறது. இதைக் கர்நாடக மாநிலம் அரசின் சின்னமாக வைத்துள்ளது.

# வேறுபாடு அறிவோம்

வால், வாள், வாழ் - ஒரே ஒலிப்பையும், வேறுபட்ட பொருளையும் உணர்த்தும் இச்சொற்கள் ஒலிப்பின் போது நுண்ணிய வேறுபாடுகளை மட்டுமே கொண்டிருக்கின்றன. எது சரி, எது தவறு என மயங்க வைப்பவையாக இருப்பதால் இவை மயங்கொலிச் சொற்கள் எனக் கூறப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| வால் | – | விலங்கின் உறுப்பு |
| வாழ் | – | வாழ்த்துதல் |
| வாள் | – | போர்க்கருவி |





அலை, அழை, அளை என பல எடுத்துக்காட்டுகளைக் கூற முடியும். உங்களுக்குத் தெரிந்த மயங்கொலிச் சொற்களை நண்பர்களிடம் கூறுங்கள். யார் அதிகச் சொற்களைச் சொல்கிறார்கள் என்று விளையாட்டாக கூட ஆடலாம்.

உங்களின் தகவல்கள் ரகசியமாகப் பாதுகாக்கப்படும்

**மாணவர்களே!**
உங்களுக்கு எதற்காவது அச்சமா?
உங்களுக்குப் பாதுகாப்பில்லை என்று உணர்கிறீர்களா?
உங்களைப் பாலியல் ரீதியாக யாரும் துன்புறுத்துகிறார்களா?
தேர்வு மற்றும் உயர்கல்வி பற்றிய வழிகாட்டுதல் தேவையா?

பள்ளிக் கல்வித் துறையின் மாணவர் உதவி எண்

நம்பிக்கையுடன் இந்த இலவச உதவி மையத்தை உடனடியாக உதவிக்கு அழைக்கலாம்

**14417**

# சொற்களை உருவாக்குவோம்

சிறுவன் ஊதும் குமிழிகளில் இருக்கும் எழுத்துகளை வைத்து சொற்களை உருவாக்குங்கள். அந்தச் சொற்களில் குறைந்தது 4 எழுத்துகள் இருக்க வேண்டும்.




**Answers:**
1. AUNT, 2. ACNE, 3. COPE, 4. CHIP, 5. CUTE, 6. CHOW, 7. CHIN, 8. CHAT, 9. CANE, 10. HINT, 11. HUNT, 12. HOPE, 13. HEAT, 14. HATE, 15. NOTE, 16. PATH, 17. PANT, 20. POINT, 21. QUIET, 22. QUITE, 23. TAPE, 24. WHAT, 25. WENT, 26. WIPE, etc.

# கண்டுபிடியுங்கள்

நாம் பல ஆங்கிலச் சொற்களை 'very' சேர்த்து உபயோகிப்போம். ஆனால் அதை வேறுவிதமாக எப்படிக் கூறலாம் என்பதைக் கண்டுபிடியுங்கள்.

**Very big – Huge**

They live in a very big house.
They live in a huge house



**Very Small – Tiny**

There was a very small hole in a sock.
There was a tiny hole in a sock.



**Very cold – Freezing**

It's very cold outside.
It's freezing outside.



**Very lazy – Sluggish**

A heavy lunch makes me very lazy in the afternoon.
A heavy lunch makes me sluggish in the afternoon.



**Very dirty – Filthy**

The room was very dirty and needed a deep clean.
The room was filthy and needed a deep clean.



**Very wet – Soaked**

I was very wet after the rain.
I was soaked after the rain.



**Very hungry – Starving**

I skipped breakfast. So I am very hungry
I skipped breakfast. So I am starving.



**Very bad – Awful**

This food tastes very bad
This food tastes awful



**Very tired – Exhausted**

I am very tired from running.
I am exhausted from running.



**Very happy – Delighted**

I am very happy with my test result.
I am delighted with my test result.



# தூண்டில்

முகிலன், கையில் தூண்டிலோடு குளத்தை நோக்கிச் சென்றான். பள்ளி விடுமுறை நாட்களில் மீன் பிடிப்பதுதான் அவனுக்கு மிகவும் பிடித்தமான பொழுதுபோக்கு. அவன் மீன்களைப் பிடிப்பதில் கெட்டிக்காரன்.

முகிலனின் நண்பன் செழியனும் வந்து சேர்ந்தான். அவன் கையிலும் தூண்டில் இருந்தது.

இருவரும் சேர்ந்து தூண்டில் போட்டு ஏராளமான மீன்களைப் பிடித்து விடுவார்கள். ஒவ்வொரு மீன் கிடைக்கும் போதும் இருவரும் சேர்ந்து நடனம் ஆடுவார்கள். இருவரும் குளக்கரையின் மேல் இருந்த பெரிய கல் ஒன்றில் உட்கார்ந்தனர். தூண்டிலை குளத்திற்குள் வீசினர்.

பத்து நிமிடம் ஆயிற்று. மீன் எதுவும் சிக்கவில்லை.

அரை மணி நேரம் ஆயிற்று. மீன் எதுவும் தூண்டிலில் சிக்கவில்லை. ஒரு மணி நேரம் ஆயிற்று. மீன் எதுவும் தூண்டிலில் சிக்கவில்லை. இரண்டு மணி நேரம் ஆயிற்று. மீன் எதுவும் தூண்டிலில் சிக்கவில்லை.

இருவரின் முகமும் மீன் கிடைக்காத சோகத்தில் சோர்ந்து போயின. இனியும் காத்திருப்பதில் பயன் இல்லை என்று நினைத்தனர். குளத்தில் குளித்துவிட்டு வீட்டுக்குப் போகலாம் என இருவரும் குளத்தில் குதித்தனர்.

நீருக்கடியில் மீன்கள் நடனம் ஆடிக்கொண்டு, "அப்பாடா... இன்றைக்குத் தூண்டில்காரர்களிடம் இருந்து தப்பிவிட்டோம்" என்று பாட்டுப் பாடின.

அதைப் பார்த்த முகிலனும் செழியனும் 'ஓ! இன்றைக்கு நடனம் ஆடும் வாய்ப்பு மீன்களுக்குக் கிடைத்திருக்கிறது' என்று நினைத்துக் கொண்டார்கள்.

– மீனா

# Fishing rod

**Mugilan went towards a pond with a fishing rod. His favourite hobby was to fish during school holidays. He was smart in fishing.**

Chezhiyan, Mugilan's friend also joined with him. He too had a fishing rod. Both of them used to collect a lot of fish by throwing the fishing rods. Whenever they catch a fish they dance in happiness. Both of them were sitting on a huge stone on the bank of the pond. They threw the fishing rods into water.

Even after 10 minutes, no fish was caught.

Even half an hour later, no fish was caught. Even after an hour and two hours no fish was caught in the fishing rod.


Both of them were sad of not catching any fish. They thought that there was no use of waiting still. Both of them jumped into the pond with the thought of reaching home after bathing.

In the pond, the fish sang and danced "My God! Today we got escaped from the fishermen." On seeing this, Mugilan and Chezhiyan said "Oh! The fish got the chance for dancing today."

- Meena

Translated by

Meenakshi.D



# எந்தப் பறவையின் முட்டை உலகிலேயே மிகப் பெரியது?




நெருப்புக்கோழி இடும் முட்டைதான் மற்ற பறவைகளின் முட்டைகளை விடவும் மிகப் பெரியது. எவ்வளவு பெரியது தெரியுமா? அதன் முட்டை சுமார் 15 செ.மீ. நீளமும், 1.5 கி.கி எடையும் உடையது. பல நெருப்புக்கோழிகள் ஒரே குழியில் முட்டை இட்டாலும், ஒவ்வொன்றும் தங்களது முட்டையை அடையாளம் கண்டுகொள்ளுமாம்.



**உணவு பதப்படுத்தும் முறையைக் கண்டறிந்தவர் யார்?**

நாம் பிரிட்ஜில் உணவை வைக்கும்போது குளிரூட்டிகளால் அந்த உணவு பாதுகாக்கப்படுகிறது. இப்படியான பதப்படுத்தும் முறையைக் கண்டறிந்தவர் கிளாரன்ஸ் பேர்ட்ஸ்ஐ [Clarence Birdseye] ஆவார்.

அமெரிக்காவைச் சேர்ந்த இவர் 300க்கும் மேற்பட்ட கண்டுபிடிப்புகளுக்குக் காப்புரிமை பெற்றவர். அவற்றில் முக்கியமானது உணவு பதப்படுத்தும் முறை. நீண்ட காலத்துக்கு உணவைச் சேமித்து வைக்கும்போது, உணவுகளின் சுவை, நிறம், சத்து மாறாமல் பதப்படுத்தும் முறையை 1924ஆம் ஆண்டு கண்டுபிடித்தார். அதனால் பதப்படுத்தப்பட்ட 'உணவுத் தொழிலின் தந்தை' எனப் போற்றப்படுகிறார்.



**தாவர உண்ணி, ஊன் உண்ணிகளைப் போல வேறு வகை உள்ளனவா?**

உள்ளது. மீன்களை மட்டும் உணவாக உண்ணும் விலங்குகளை மீன் உண்ணி (Piscivore) என்று குறிப்பிடுகிறார்கள்.



உதாரணமாக, பாராகுடா, வெள்ளை சுறா, மார்லின் உள்ளிட்டவை கடலில் வாழும் மீன் உண்ணிகள். வடக்கு பைக், லார்ஜ்மௌத் பாஸ், அமெரிக்க அலிகேட்டர் போன்றவை நன்னீரில் வாழும் மீன் உண்ணிகள். ஆஸ்ப்ரே எனும் பறவையும் மீன் உண்ணிதான். இது நீரின் மேற்பரப்பில் வட்டமிட்டு மீன்களைத் தேடிப் பிடித்து உண்ணும்.



**யுனெஸ்கோ அமைப்பு எதற்காக உருவாக்கப்பட்டது?**

உலக நாடுகள் ஒன்றுக்கொன்று உதவும் வகையில் பல அமைப்புகள் உள்ளன. அவற்றில் ஒன்று யுனெஸ்கோ (UNESCO-United Nations Educational Scientific and Cultural Organization).

இரண்டாம் உலகப் போருக்குப் பின் அழிக்கப்பட்ட பள்ளிகள், நூலகங்கள், கலைநயமிக்க கட்டடங்கள் போன்றவற்றைப் புதுப்பித்துப் பாதுகாக்க யுனெஸ்கோ என்ற அமைப்பு தொடங்கப்பட்டது.

நாடுகளிடையே அமைதியை நிலைநாட்டல், சுற்றுச்சூழல் பாதுகாத்தல், பாலினச் சமத்துவம், வறுமை ஒழிப்பு, அனைவருக்கும் கல்வி, பன்முகக் கலாசாரத்தை ஊக்குவித்தல், தகவல் தொழில்நுட்பத்தை மேம்படுத்துதல் போன்றவையும் இந்த அமைப்பின் முக்கிய குறிக்கோள்கள் ஆகும்.

## கேளுங்கள்!

**உங்களின் கேள்விகளை அஞ்சல் அட்டையில் எழுதி அனுப்புங்கள்.**





முகவரி :
'அறிவோம் ஆயிரம்',
'தேன்சிட்டு' சிறார் இதழ்
8ஆவது தளம், ஈ.வெ.கி. சம்பத் மாளிகை,
பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம்,
கல்லூரிச்சாலை,
சென்னை - 600 006.
மின்னஞ்சல்: thenchittu@tnschools.gov.in


# சோம்பல் முறிக்கும் சிலந்தி


**தேவையான பொருட்கள்:**

தட்டு 1
தாள் 1
பென்சில் - 1
கத்தரி - 1
நீர்












## செய்முறை:

- தாளில் ஒரு சிலந்தியின் உருவத்தை, வரையவும்.
- படம் 2இல் காட்டியவாறு அந்த உருவத்தை வெட்டிக் கொள்ளவும்.
- படம் 3இல் உள்ளவாறு சிலந்தி வலையின் முனைகளை பென்சிலால் உள்நோக்கி உருட்டிக் கொள்ளவும்.
- அனைத்து முனைகளும் உள்நோக்கி இருப்பதுபோல் செய்து கொள்ளவும்.
- படம் 4இல் உள்ளவாறு தட்டில் தண்ணீரை ஊற்றிக்கொள்ளவும்.
- படம் 5இல் உள்ளவாறு தாளால் செய்து வைத்த சிலந்தியைத் தண்ணீரில் விடும்போது, படம் 6இல் உள்ளவாறு சுருண்ட துண்டுகள் நேராக மாறுவதைக் காணலாம்.
- படம் 7இல் உள்ளவாறு மடக்கி வைத்த முனைகள் அனைத்தும் விரிந்து வருவதைப் பார்க்க முடியும்.

இதேபோல் பலவிதமான வடிவங்களைச் செய்து மகிழுங்கள்.







நன்றி: aravindguptatoys.com

- இது இலவச தொலைபேசி எண்
- இரவு - பகல் எந்த நேரமும் அழைக்கலாம்
- உங்களுக்கு என்ன உதவி தேவை என்றாலும் இந்த எண்ணிற்கு அழையுங்கள்



சைல்டு லைன் 1098
(குழந்தைகள் பாதுகாப்பு உதவி மையம்)

# கண்டுபிடி

1


இங்கே கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தை உற்று நோக்குங்கள். விடுபட்ட இடத்தைக் குறிப்பிட்ட எண்கள் கொண்டு நீங்கள் பூர்த்தி செய்ய வேண்டும். ஒரே ஒரு நிபந்தனை மட்டும் உண்டு. அப்படி நீங்கள் பூர்த்தி செய்த பின் இந்தக் கட்டத்தில் உள்ள எண்களை எந்தப் பக்கத்தில் இருந்து கூட்டினாலும் 21 வரவேண்டும்.

| | | |
|---|---|---|
| 8 | 9 | ? |
| 3 | ? | 11 |
| ? | 5 | 6 |

# அது எது?

2


இங்கே வரையப்பட்டுள்ள விலங்குகளைப் பாருங்கள். அவற்றில் ஒன்று மட்டும் மற்றவற்றில் இருந்து வேறுபட்டுள்ளது. அது எது?



# அடையாளம் காட்டு

3

இந்தப் பகடைக் காய்களைக் கவனியுங்கள். இவற்றில் தவறான பகடைக் காய்களை அடையாளம் காணுங்கள்.





விடைகள்: 20ஆம் பக்கம்


# மாணவர் கலைவண்ண

**அ.சுகைனா ஜன்னத்,**

7ஆம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி, கீரனூர், இராமநாதபுரம்.










**பி. பிரியதர்ஷினி,**


7ஆம் வகுப்பு , அரசு மேல்நிலைப் பள்ளி, த.கீழவெளி, அரியலூர்.





**ஆர். புவனேஷ்,**


6ஆம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, பள்ளப்பட்டி , தருமபுரி.





**மா. கார்த்திகை செல்வி,**


7ஆம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, எஸ்.பாறைப்பட்டி, திண்டுக்கல்.





**ம. நிர்மலா,**

7ஆம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, பிரிதிவிமங்கலம்(இ), கள்ளக்குறிச்சி.






**வே. முத்தரசி,**

8ஆம் வகுப்பு, நகராட்சி நடுநிலைப் பள்ளி, மச்சுவாடி, புதுக்கோட்டை.

**பி. காயத்திரி,**

7ஆம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, மிட்டாபுதூர், சேலம்.










**எஸ்.ஷாஜிதா அஃப்ரின்,**

9ஆம் வகுப்பு, அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, லப்பைக்குடிகாடு, பெரம்பலூர்.





**அ.ச. ஆசை நிலவன்,**

8ஆம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, மார்க்கண்டேயன்பட்டி, சிவகங்கை.

**வி. ஸ்வேதா,**

8ஆம் வகுப்பு, அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளி , சோமங்கலம், காஞ்சிபுரம்.





# ணம்






**வி. சித்திக்,**
7-ஆம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, காளசிவாய், மயிலாடுதுறை.



**எம். சுஜித்,**
8ஆம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, முருகம்பாளையம், திருப்பூர்.




**டி. ஹரிஹரன்,**
8ஆம் வகுப்பு, T.M.K.V அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி , காங்கேயநல்லூர், வேலூர்.



**மு. ஸ்ரீதர்,**
9ஆம் வகுப்பு, இராஜா தேசிங்கு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, செஞ்சி, விழுப்புரம்.

**ச. திவ்யா,**
9ஆம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, பெரியகண்ணாலப்பட்டி, திருப்பத்தூர்.





**பி. அனுஷா,**
9ஆம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி, சீவலப்பேரி, திருநெல்வேலி.



**வி. தியா,**
6ஆம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, ஆட்டந்தாங்கல், திருவள்ளூர்.

**எஸ். சுபிக்ஷா,**
9ஆம் வகுப்பு, அரசு பெண்கள் மேல் நிலைப் பள்ளி, திருச்செந்தூர், தூத்துக்குடி.





**மு. கௌசிக்,**
8ஆம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, முத்துப்பிள்ளை மண்டபம், தஞ்சாவூர்.

படைப்புகளை அனுப்பும் மாணவர்கள் தங்களின் புகைப்படம், பெயர், வகுப்பு, பள்ளியின் பெயர், பள்ளி முகவரி, அஞ்சல் குறியீட்டு எண், மாவட்டம், தொலைபேசி எண் போன்ற விவரங்களையும் மறக்காமல் குறிப்பிட்டு அனுப்ப வேண்டுகிறோம்.

முகவரி : 'மாணவர் கலைவண்ணம்',

**'தேன்சிட்டு' சிறார் இதழ்**
8வது தளம், ஈ.வெ.கி. சம்பத் மாளிகை,
பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம்,
கல்லூரிச்சாலை, சென்னை - 600 006.
மின்னஞ்சல் : thenchittu@tnschools.gov.in

# மரங்களில் இலைகள் வந்த கதை

(நியூசிலாந்து நாட்டுப்புறக் கதை)

**பழங்காலத்தில் மரங்களில் இலைகளே இல்லையாம். மனிதர்களும் பறவைகளும் விலங்குகளும், இலைகள் இல்லாத மரங்களையே பார்த்துப் பழகிய காலம் அது. ஒருமுறை எங்கும் கடும் கோடையும் வெயிலும் வாட்டியது. குளங்கள், ஆறுகள், ஓடைகள் என நீர்நிலைகள் அனைத்தும் வறண்டு போய்விட்டன.**

ஒருநாள் காட்டிலிருந்த அனைத்து விலங்குகளும் ஒன்று கூடி விவாதித்து மன்னரிடம் சென்று முறையிட்டன. "மன்னரே, இந்தக் கடும் வெப்பத்திலிருந்து எங்களைக் காப்பாற்றுங்கள். இந்த மரங்களை மூடி வைத்து அதன் கீழ் தங்கினால் வெப்பத்தில் இருந்து காத்துக் கொள்ளலாம். தயவு செய்து ஏதேனும் செய்யுங்கள்."

அமைச்சரை அழைத்த மன்னன், "அமைச்சரே, மரங்களின் மீது வண்ணப் போர்வைகளைப் போட்டு மூடுங்கள். தண்ணீருக்கும் தகுந்த ஏற்பாடுகள் செய்யுங்கள்" என்று கட்டளையிட்டார்.

அமைச்சர் காட்டுக்குள் சென்று சில மரங்களை வண்ணப் போர்வைகள் கொண்டு மூடினார். விலங்குகள் அனைத்தும் அதன் நிழலில் ஒதுங்கி சற்று நிம்மதி அடைந்தன. அவை தண்ணீரைப் பற்றி மறந்துவிட அமைச்சர் அமைதியாகத் திரும்பிச் சென்றுவிட்டார்.

காட்டைப் போல நாட்டுக்குள்ளும் இதே ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என மக்கள் கோரினார்கள். மன்னரும் தன் அமைச்சரை அழைத்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்யச் சொன்னார். அமைச்சரோ இரண்டு மூன்று மரங்களில் மட்டும் வண்ணப் போர்வைகள் போர்த்தி நிழல் உண்டாக்கினார்.

மரங்கள் தந்த நிழலைப் பங்கிட்டுக் கொள்வதற்காக மக்களுக்குள் சண்டை மூண்டது. அந்தச் செய்தி மன்னருக்குத் தெரிவிக்கப்பட்டது. மன்னர் அமைச்சரிடம், "அமைச்சரே, நம் மக்கள் ஏன் பொறுமையிழந்து இப்படிச் சண்டையிடுகிறார்கள்? நீங்கள்தான் ஏதாவது செய்து இதைச் சரி செய்ய வேண்டும்" என்றார்.

அமைச்சர், "மன்னரே, மரங்களுக்கு வண்ணப் போர்வை போர்த்தி விடுவதோடு அவற்றில் இலைகளைப் பசை கொண்டு ஒட்டினால் நன்றாக இருக்கும். அவை வளிமண்டலத்திற்குக் குளிர்ச்சியைத் தரும். மக்களும் பயனடைவார்கள்" என்று சொன்னார். மன்னரும் அதற்குச் சம்மதித்தார்.

அமைச்சர், "மன்னரே.. மரங்களில் ஒரே அளவு கொண்ட இலைகளை ஒட்டி வைத்தால்தான் பார்க்க அழகாக இருக்கும். அதற்கு கைவினைஞர்கள் சிலர் தேவைப்படுகிறார்கள்" என்றார்.

மன்னர் கைவினைஞர்கள் சிலரை நியமித்து அதற்கு உத்தரவிட்டார். ஒரே அளவு கொண்ட இலைகளைத் தேர்வு செய்ய கைவினைஞர்களுக்கு நிறைய நேரம் பிடித்தது. மக்களோ வெயில் தாளாமல் துவண்டனர்.

அந்தக் கிராமத் தலைவர், "அமைச்சரே, உங்கள் கைவினைஞர்கள் மிகவும் மெதுவாக வேலை செய்கிறார்கள். ஒரு நாளில் ஒரு மரத்தில் கூட இலைகளைச் சரியாக ஒட்டி முடிக்கவில்லை. நாங்கள் வெப்பத்தால் இறந்து கொண்டிருக்கிறோம்" என்று முறையிட்டார்.


"எந்தவொரு வேலையைச் செய்து முடிக்கவும் அதற்குண்டான நேரம் ஆகத்தான் செய்யும். விரைந்து நடக்க வேண்டுமென்று விரும்பினால், நீங்களும் எங்களுக்கு உதவலாமே" என்றார் அமைச்சர்.

ஒட்டுமொத்த கிராம மக்களும் உதவுவதற்கு முன்வந்தனர். ஆனால் அவர்களால் ஒரே வடிவத்திலும் அளவிலும் இலைகளைத் தேர்வு செய்து ஒட்டி வைக்க முடியவில்லை. நூற்றுக்கணக்கான வடிவங்களிலும், அளவுகளிலும் இலைகளைத் தேர்வு செய்து ஒட்டினர். அதைப் பார்த்த அமைச்சர், "இது ஒரு பிரச்சினை இல்லை. வேலையைச் சீக்கிரம் முடிக்க வேண்டும் என்பதே முக்கியம்" என்றார்.


விரைவிலேயே மரங்கள் அனைத்தும் இலைகளால் மூடப்பட்டன. நிறைய இலைகள் தரையிலும் விழுந்து சிதறிக் கிடந்தன. மக்கள் அனைவரும் நிழல் தரும் மரத்தடிகளில் அமர்ந்து வேடிக்கை பார்த்தனர். பறவைகள் மகிழ்ச்சியுடன் சிலிர்த்துப் பறந்தன. மரங்களில் இலைகள் வந்த பிறகு மழை பெய்யவும் தொடங்கியது. வெவ்வேறு மரங்கள் வெவ்வேறு அளவுகளில், வடிவங்களில் இலைகளை உற்பத்திச் செய்யத் தொடங்கின. மரங்கள் அனைத்து உயிரினங்களுக்கும் குளிர்ந்த காற்றை வழங்கத் தொடங்கின.

– தமிழில்: நாணற்காடன்

('நெருப்பு விதை' நூலில் இருந்து)



# எங்கள் மாவட்டம் தென்காசி





குற்றாலம் என்றதுமே குளிர் கலந்த காற்றுதான் பலரின் நினைவுக்கு வரும். 2019ஆம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்தில் இருந்து பிரிக்கப்பட்டது தென்காசி மாவட்டம். தெற்கில் திருநெல்வேலியும் வடக்கில் விருதுநகரும் கிழக்கில் தூத்துக்குடியும் மேற்கில் கேரளமும் எங்கள் மாவட்ட எல்லைகளாக அமைந்துள்ளன.

மாவட்டத்தின் பெரும்பான்மையான மக்களின் தொழில் விவசாயம்தான். ஊருக்கே சோறு போடும் விவசாய மண் எங்கள் ஊர் என்பதில் தனிப் பெருமை எங்களுக்கு உண்டு. வேளாண்மையைச் செழிக்க வைக்க குண்டாறு அணை, கருப்பா நதி அணை, அடவி நயினார் அணை போன்ற பல நீர்த் தேக்கங்கள் அமைந்துள்ளன.



பூலித்தேவன

விவசாய மண் மட்டுமல்ல, நம் நாட்டு விடுதலைக்காகக் களம் கண்ட வாஞ்சிநாதன், பூலித்தேவன் உள்ளிட்ட பல வீரர்கள் வாழ்ந்த வீரமிக்க நிலம் இது.



வாஞ்சிநாதன

எங்கள் மாவட்டத்தில் காசி விஸ்வநாதர் ஆலயம், பொட்டல்புதூர் தர்கா, இலஞ்சி குமாரர் கோவில் எனப் பல்வேறு ஆன்மிகத் தலங்கள் உள்ளன.

### மாவட்டத்திற்குப் பெருமை சேர்க்கும் குற்றாலம்

கடல் மட்டத்தில் இருந்து சுமார் 160 அடி உயரத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையில் அமைந்துள்ளது குற்றாலம். இதுதான் சிற்றாறு, மணிமுத்தாறு, பச்சையாறு, தாமிரபரணி ஆகிய ஆறுகளின் பிறப்பிடம்.

குற்றால அருவியில் குளிக்கத் தினந்தோறும் மக்கள் குவிந்துகொண்டே இருப்பார்கள். பழந்தமிழ் இலக்கியமான 'குற்றாலக் குறவஞ்சி'யில் 'குற்றால மலை எங்கள் மலையே' என்று பாடப்பட்டிருக்கிறது.





ஐந்தருவி

குற்றாலத்தை ஒட்டி மெயின் அருவி, பழைய குற்றாலம், ஐந்தருவி, செண்பகாதேவி அருவி, தேனருவி, புலியருவி, சிற்றருவி, பழத்தோட்ட அருவி, பாலருவி ஆகியவை உள்ளன.

குற்றாலத்தில் அரிய வகை மூலிகைகள் ஏராளமாக உள்ளன. அதனால் இந்த அருவிகளில் குளிப்பதால் உடலுக்கு மருத்துவப் பலன் கிடைக்கும் என்று கூறப்படுகிறது.

அருவியில் குளிக்கவும் அழகான மலையை இரசிக்கவும் எங்கள் மாவட்டத்திற்கு அவசியம் வாங்க!







- து. இலக்கியா - மா.ஆதிரா ஸ்ரீமுகி - து.கிருத்திகா


அரசு உயர்நிலைப் பள்ளி, வேதம் புதூர், தென்காசி.


# புறா

பள்ளி, கடற்கரை, மைதானம் எனப் பல இடங்களில் நாம் பார்க்கும் ஒரு பறவை புறா. புறாக்களைத் தூது அனுப்பிய வரலாற்றுச் செய்திகள் எல்லாம் உண்டு. புறாக்களை மனிதர்கள் வளர்க்கும் பழக்கம் பழங்காலத்திலேயே உள்ளது. புறாவைப் பற்றிச் சுவாரசியமான செய்திகளைப் பார்ப்போம்.

- சாதாரணப் புறாக்களுக்கு 12 வால் இறகுகள் உள்ளன. வீடுகளில் வளர்க்கப்படும் ஆடும் புறாவுக்கு 40 வால் இறகுகள் வரை உள்ளன.

- மன்னர்கள் காலத்தில் தூது விடுவதற்குப் புறாக்கள் பயன்படுத்தப்பட்டன. இந்தியாவின் ஒடிசா மாநிலம், கட்டாக் மாவட்டத்தில் ஆங்கிலேயர் காலத்தில் இருந்து காவல் நிலையங்களுக்கு இடையே புறாக்கள் வழியாகவே செய்திகள் பரிமாறப்பட்டன. இதற்கென 100 பெல்ஜிய ஹோமர் புறாக்கள் வளர்க்கப்பட்டனவாம்.





- புறாக்கள் சுமார் 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியதாக அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர். கொலம்பிடே பறவை இனத்தைச் சார்ந்த புறாவில் ஏறத்தாழ 250க்கும் மேற்பட்ட இனங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

- உலகில் வாழும் புறாவின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு தென்கிழக்கு ஆசியா, ஆஸ்திரேலியா மற்றும் மேற்கு பசிபிக் தீவுகளில் காணப்படுகின்றன.

- புறாக்களில் மணிப்புறா, தவிட்டுப்புறா, பச்சைப்புறா ஆகிய இனங்கள் உருவத்தில் சற்று சிறியதாக இருக்கும்.

- பல கிலோ மீட்டர் தொலைவிற்குப் பறந்து சென்றாலும், புறாக்களால் எளிதாக அதன் கூட்டை மீண்டும் அடைய முடியும்.



- முட்டைகளை, பெண் புறா இரவிலும், ஆண் புறா பகலிலும் அடைகாக்கும். சுமார் 14 முதல் 19 நாட்கள் வரை அடைகாத்த பின் முட்டையிலிருந்து குஞ்சுகள் வெளி வருகின்றன. பின்னர் அக்குஞ்சுகள் 12 முதல் 18 நாட்கள் கூட்டிற்குள் வளர்க்கப்படுகின்றன.



- தானியங்களும் விதைகளும் புறாவின் உணவாகும். இரையைச் சேகரித்து வைத்துக் கொள்ளப் புறாவுக்குத் தீனிப் பை உள்ளது. தேவைப்படும்போது இரையில் ஒரு பகுதியை இரைப்பைக்குக் கொண்டு சென்று செரிமானம் செய்து கொள்ளும். இவை தம் தீனிப் பையில் சுரக்கும் தயிர் போன்ற ஒரு பொருளைக் குஞ்சுகளுக்கு ஊட்டுகின்றன.



- அனைத்து விதமான பறவைகளும் நீரை அலகினால் எடுத்து, தலையைத் தூக்கிப் பருகுகின்றன. ஆனால் புறாக்கள் நிமிராமல் நீரைத் தன் அலகால் உறிஞ்சிக் குடிக்கின்றன.

# தஞ்சாவூர் தலையாட்டி பொம்மைகள்

**தஞ்சாவூர் என்றதும் சட்டென்று நினைவில் வருவது தஞ்சையின் அடையாளமாக இருக்கும் பெரியகோயில்தான். அதற்கு அடுத்தபடியாக நம் கண்களில் நடனமாடுவது தஞ்சாவூர் தலையாட்டி பொம்மையே.**

தஞ்சாவூரின் பாரம்பரியம் என்றால் இசைக்கருவிகள், ஓவியங்கள், கைவினைப் பொருட்கள் இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம். நடன மங்கை பொம்மைகள், தாத்தா பாட்டி பொம்மைகள், ராஜா ராணி பொம்மைகள் எல்லாம் பல அழகிய வண்ணங்களாலும், புது புது வடிவங்களிலும் பார்ப்பவரைக் கவரக்கூடிய விதத்திலும் இங்கு செய்யப்படுகின்றன. ஆனால் இவை எல்லாம் தற்காலத்தில் உருவானவை. இவற்றை விடவும் பாரம்பரியப் பெருமையும் தனிச்சிறப்பும் வாய்ந்தவை தலையாட்டி பொம்மைகள்.

### சாயாத பொம்மை

தஞ்சாவூர் தலையாட்டி பொம்மை என்றால் அது உருட்டு பொம்மையையே குறிக்கும். பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கும் இந்தப் பொம்மைகள்.

உருட்டுபொம்மைகளில் முதலில் தயாரிக்கப்படுவது அடிபாகம் தான். கிண்ணம் போன்ற அடிப்பகுதியில் களிமண்ணை நிரப்புவதால் அவை பெரியதாகவும், எடை மிகுந்தும் இருக்கும். அதேநேரம் அதன் மேற்புறத்தில் குறுகலாகவும், எடை குறைவானதாகவும் செய்யப்படுகின்றன. அதன்மேல் பொம்மையின் உடல்பகுதி தயார் செய்யப்பட்டு இணைப்பார்கள்.

பொம்மையின் அடிப்பாகம் செய்யப்படும் விதத்தால்தான் இந்தப் பொம்மையை நாம் எந்தப் பக்கம் தள்ளினாலும் அது சாய்ந்து சாய்ந்து கீழே விழாமல் மீண்டும் பழைய நிலைக்கே வந்து நிற்கும்.



### அறிவியலாகும் கலை

பொம்மைகள் எந்தப் பக்கமும் சாயாமல் இருப்பதிலும் ஓர் அறிவியல் இணைந்துள்ளது. புவிசர்ப்பு விசையை மையமாகக் கொண்டு இவை செங்குத்தாக நிற்பதைப் போல் உருவாக்கப்படுகின்றன.

19ஆம் நூற்றாண்டில் தஞ்சையை ஆண்ட சரபோஜி மன்னர் காலத்தில்தான் தஞ்சாவூர் தலையாட்டி பொம்மைகள் முதன்முதலாகத் தயாரிக்கப்பட்டதாகக் கணிக்கப்படுகிறது.


### இயற்கைக்கு நல்லது


தலையாட்டி பொம்மைகளைத் தயாரிக்க களிமண், காகிதக் கூழ் உள்ளிட்ட இயற்கையான பொருட்களே பயன்படுத்தப்படுகின்றன. இதனால் இவற்றை உருவாக்கும்போதும், உடைந்துவிட்டால் தூக்கியெறியும்போதும் சுற்றுச்சூழலுக்குச் சிறிதும் தீங்கு விளைவிக்காது.

### அடையாளம்

தஞ்சாவூர் தலையாட்டி பொம்மை நம் அடையாளம். அதனால், 2008ஆம் ஆண்டு இந்திய அரசு இப்பொம்மைகளுக்குப் புவிசார் குறியீடு அளித்தது.

தொகுப்பு:
மு. தர்ஷினி


தயாரா? ஆம்! விளையாடு!
கதை : அருந்ததி நாத்
ஓவியங்கள் : பிரியங்கர் குப்தா
தமிழில்: ராஜம் ஆனந்த்
அனுவுக்கு கிரிக்கெட் என்றால் மிகவும் பிடிக்கும். அவள் பார்வையைக் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து வருகிறாள்.
தனக்கும் கிரிக்கெட் ஆடக் கற்றுத் தரும்படி அப்பாவிடம் கேட்டாள் அனு.
கிரிக்கெட் ஆட பந்து, மட்டை, கையுறையுடன், வயிறு, தொடை மற்றும் கைகளுக்கான காப்புறைகளையும் அப்பா வாங்கி வந்தார்.
அனுவைப் போலவே பார்வை இழந்து வரும் சாந்தாவும் மிருதுளாவும், முழுமையாகப் பார்வையை இழந்த அமிதாவும் அனு வீட்டுக்கு வந்தனர். கூடவே நன்கு பார்க்கக்கூடிய ரூமியும் வந்தாள்.
மைதானத்தில் ஸ்டெம்புகளை நட்டார் அப்பா. அதன் மீது பந்து பட்டால் ஒலி எழுப்பும். டுவாங்!
அவர் கையில் இருந்த ஃபைல் பந்தின் உள்ளே இருந்த மணிகள் ஜல்ஜல்ஜல் என ஓசை எழுப்பின.
"அனு இந்த ஓசை, பந்து எங்கே இருக்கிறது என்று கணிக்க உதவும்" என்றார் அப்பா.
சாந்தாவின் கையில் பந்தைக் கொடுத்து "தயாரா?" என்று கேட்கச் சொன்னார். அனு "ஆம்" என்றதும் "விளையாடு" என்று உரக்கச் சொல்லி பந்தை எறியச் சொன்னார்.
அனு தன் இடத்தைச் சரி பார்த்து நின்றாள்.
"தயாரா?"
"ஆம்!"
"விளையாடு."


ஜல்... ஜல்... ஜல்...
பந்து ஆடுகளத்தில் நான்கு முறை பட்டுக் குதித்து வருகிறது. அனு பந்தைத் தவறவிட்டாள். அடுத்த பந்தை மைதானத்தின் எல்லைக்கு அனுப்பினாள். நான்கு ரன்கள்.
தோழிகளோடு தினமும் பயிற்சி எடுத்தாள் அனு. பள்ளிக்கு இடையே நடைபெறும் போட்டியை அறிவித்தார் ஆசிரியர்.
பூவா தலையா? போட்டதில் அனு வெற்றி பெற்று பவுலிங் வீச முடிவு எடுக்கிறாள்.
ஜல்... ஜல்... ஜல்...
எதிர் அணியில், பானு பந்துகளைக் கணித்து ஆடினாள். ஆனாலும் மிருதுளா கேட்ச் பிடித்து பானுவை அவுட் ஆக்கிவிட்டாள்.
அடுத்து வந்த மேரியையும் ஒரே பந்தில் அவுட் ஆக்கினாள் அனு.
டுவாங்... டுவாங்...
இரண்டு பந்துகள் இரண்டு விக்கெட்டுகள். அடுத்த பந்திலும் விக்கெட் எடுக்க அனுவால் முடியுமா?
அடுத்து ஆட வந்த மாயா, பந்தைக் கணித்து ஆடிவிட்டாள். ஆனால், ரன் எடுக்க ஓடும்போது ரன் அவுட் ஆக்கிவிட்டனர்.
மூன்று பந்துகள்... மூன்று விக்கெட்டுகள்!
உற்சாகமாகக் கொண்டாடினர் அணியினர்.
போட்டியின் முடிவில் அனு அணியே வெற்றி பெற்றது.
பார்வையற்றோர் கிரிக்கெட்.
ஓரளவு அல்லது முழுமையாகப் பார்வை இழந்தவர்களுக்கு விதிமுறைகளை மாற்றி அமைத்து உருவாக்கப்பட்டதே பார்வையற்றோர் கிரிக்கெட். இதற்கு ஒலி எழுப்பும் பந்தும், ஆரஞ்சு வண்ண ஸ்டெம்புகளும் பயன்படுத்தப்படும். பவுலர் பந்து வீசும்போது "விளையாடு" என்று கத்த வேண்டும் போன்ற விதிமுறைகள் உள்ளன.
நன்றி www.storyweaver.org.in

# வியக்க வைக்கும் விண்வெளி

## விண்வெளி தொடங்கும் இடம்

பூமியின் வளிமண்டலம் முடிவடையும் இடத்தில் விண்வெளி தொடங்குகிறது. இது முற்றிலும் காலியாக இருப்பதாக நம்பப்பட்ட ஒரு காலம் இருந்தது. ஆனால், அது உண்மையன்று. நட்சத்திரங்களுக்கும் கோள்களுக்கும் இடையே உள்ள பெரிய இடைவெளியில் அதிக அளவிலான வாயுக்களும் தூசிகளும் நிரம்பியுள்ளன. விண்வெளியின் வெறுமையான பகுதிகளில் கூட ஒரு கன மீட்டருக்குச் சில நூறு அணுக்கள் அல்லது மூலக்கூறுகளைக் கொண்டிருக்கும்.

## பூமியின் வளிமண்டலம்

பூமியின் வளிமண்டலம் என்பது பூமியின் ஈர்ப்பு சக்தியினால் அதனைச் சூழ்ந்து இருக்கும் பல்வேறு வாயுக்களின் படலமாகும். இது ஐந்தில் நான்கு பங்கு நைட்ரஜனையும், ஐந்தில் ஒரு பங்கு ஆக்ஸிஜனையும் மிகக் குறைந்த அளவில் கரியமில வாயு உட்பட பல வாயுக்களையும் கொண்டுள்ளது. சூரியக் கதிர்வீச்சிலிருக்கும் புற ஊதாக் கதிர்களை உறிஞ்சிக் கொள்வதன் வாயிலாகவும், பகல், இரவு நேரங்களுக்கு இடையேயான வெப்பநிலை வேறுபாடுகளைக் குறைப்பதன் வாயிலாகவும் வளிமண்டலம் பூமியில் உயிரினங்களின் வாழ்வைப் பாதுகாக்கிறது.

## விண்வெளியின் நிறம்


விண்வெளியில் சுவாசிக்கக் காற்றோ, ஒளிச் சிதறலோ இல்லை. இதனால் மனிதர்கள் அங்கு வாழ்வது கடினம். விண்வெளி நிறமற்றது.

மேலும், பூமியில் இருந்து நாம் காணும் வானத்தைப் போல அது நீலமானதல்ல. விண்வெளியில் ஆக்ஸிஜன் மூலக்கூறுகளின் அளவு ஒப்பீட்டளவில் குறைவாக இருப்பதே இதற்குக் காரணம். வெற்றிடத்தில் அணுக்கள் மற்றும் மூலக்கூறுகள் போதுமான அளவு நெருக்கமாக இல்லை. இதன் காரணமாக ஒலியும் பரவுவதில்லை.

## விண்வெளி எவ்வளவு பெரியது?

எவ்வளவு பெரிய இடம் என்பது யாருக்கும் தெரியாது. விண்வெளியில் நீண்ட தூரம் 'ஒளி ஆண்டுகளில்' அளவிடப்படுகிறது. இது, ஒளி ஓர் ஆண்டில் பயணிக்க எடுத்துக்கொள்ளும் தூரத்தைக் குறிக்கிறது. (ஒளி ஒரு நொடிக்கு மூன்று இலட்சம் கிலோ மீட்டர் பயணிக்கும்) இதன் பயணம் ஓர் ஆண்டில் சுமாராக $9.3 \times 10^{15}$ மீட்டர் எனக் கணக்கிட்டு இருக்கிறார்கள்.

- ஸ்ரீகுமார்,



**2ஆம் பக்க விடைகள்**

Answer Key:

camera


microphone

television

telephone

clock

fan



**11ஆம் பக்க விடைகள்**

①

| | | |
|---|---|---|
| 8 | 9 | 4 |
| 3 | 7 | 11 |
| 10 | 5 | 6 |

②

விடை:

யானையின் மீது அமர்ந்திருக்கும் பறவை.

③



விடை:

வரிசையில் கடைசி இரு பகடைக்காய்கள்



இது இலவச தொலைபேசி எண்

இரவு - பகல் எந்த நேரமும் அழைக்கலாம்

உங்களுக்கு என்ன உதவி தேவை என்றாலும் இந்த எண்ணிற்கு அழையுங்கள்

சைல்டு லைன்


1098

(குழந்தைகள் பாதுகாப்பு உதவி மையம்)

# வீரத்தின் அடையாளம்!



கொல்கத்தாவில் உள்ள பிரசிடென்சி கல்லூரியில் 1913ஆம் ஆண்டு அந்த மாணவர் சேர்ந்தார். அங்கு பணிபுரிந்த பேராசிரியர் ஓட்டன், இந்தியாவைப் பற்றி இழிவாகப் பேசியதோடு இந்திய மாணவர்களை அவமரியாதையும் செய்தார். மற்ற மாணவர்கள் இதைக் கண்டும் காணாமல் இருந்தார்கள். ஆனால், புதிதாகச் சேர்ந்த மாணவரின் தேசப்பற்று அவரைச் சும்மா இருக்க விடவில்லை. தாய்நாட்டை ஒருவர் பழிப்பதை ஒருபோதும் ஏற்க முடியாது என்று துணிச்சலுடன் அந்தப் பேராசிரியரைத் தட்டிக் கேட்டார். கல்லூரி முழுக்க அந்தச் செயல் பற்றித்தான் பேச்சு. இவரைக் கல்லூரியில் இருந்தே நீக்கியது நிர்வாகம். அதோடு, வேறு கல்லூரியில் சேர்க்க முடியாத சூழலையும் ஏற்படுத்தியது. அந்த மாணவர் சோர்ந்துபோய் விடவில்லை. ஸ்காட்டிஷ் கல்லூரியில் சேர்ந்து (Scottish Church College) இளங்கலைப் படிப்பை முடித்தார்.






ஓவியங்கள்: பா. செந்தில்குமார்

கல்லூரிப் படிப்பை முடித்த இளைஞர் மேற்படிப்புக்காக லண்டன் செல்ல நினைத்தார். பெற்றோர் அதற்குச் சம்மதிக்கவில்லை. அவர்களை மீறி 1921ஆம் ஆண்டில் லண்டன் சென்று இந்தியக் குடிமைப் பணித் தேர்வு (Indian Civil Services) எழுதி, சிறப்பான வெற்றியும் பெற்றார். தாய்நாடு அடிமைப்பட்டுக் கிடக்க, தான் மட்டும் அதிகாரத்தில் இருப்பதா என்று யோசித்தார். அதனால், ஐ.சி.எஸ். பதவியை உதறிவிட்டு இந்திய விடுதலைப் போராட்டத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

அந்த மாணவர் வேறு யாருமல்ல, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்தான். அந்நியரிடம் இருந்து தாய்நாட்டை மீட்க இந்திய தேசிய இராணுவத்தை கட்டமைத்தார். வீரம் என்றாலே இவரின் பெயர் நினைவுக்கு வரும்படியான வாழ்க்கை வாழ்ந்தவர். இவரின் இறுதிக்காலம் இன்றும் மர்மமாகவே உள்ளது. இவருக்கு இந்திய அரசின் உயரிய விருதான பாரத ரத்னா அளிக்கப்பட்டது.



நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்

# சுவையான பொன்னாங்கண்ணிக் கீரை

"கீரை.... கீரை" என்று கீரை விற்பவர் கூவுவதைக் கேட்டிருப்போம். அப்போது நாம் அவரிடம் என்ன கேட்போம். "என்ன என்ன கீரையெல்லாம் இருக்கு?" என்றுதானே! அவர் பல கீரைகளின் பெயர்களை வரிசையாகச் சொல்வார். அவற்றில் நிச்சயம் இடம்பெறும் கீரைதான் பொன்னாங்கண்ணி. அதைப் பற்றி ஆச்சரியமான செய்திகளைத் தெரிந்துகொள்வோமா?



- இந்தியாவில் பரவலாகக் காணப்படும் கீரைகளில் இதுவும் முக்கியமான ஒன்றாகும். நமது வீடுகளுக்கு அருகே, தோட்டங்களில் எனப் பல இடங்களில் இக்கீரை வளர்ந்து இருப்பதைக் காண முடியும்.
- பொன்னாங்கண்ணியின் தாவரவியல் பெயர் அல்ட்ராந்திரா செசில்ஸ் (Alternanthera Sessilis). இது அமர்ந்தாசீஸ் குடும்பத்தைச் சேர்ந்தது.
- பொன்னாங்கண்ணிக் கீரை ஒரு பருவக் குறுஞ்செடித் தாவரமாகும். படர்ந்த கிளைகளுடன், கணுக்களில் வேருடன் காணப்படும். இவற்றின் இலைகளில் நீளமானது, ஈட்டி வடிவம் என இரு வகைகள் உள்ளன.
- இந்தியாவின் தென் அந்தமான் தீவுகள் தொடங்கி இமயமலை வரை இக்கீரை இருப்பதைக் காணலாம்.
- பொன்னாங்கண்ணிக் கீரை கொடி வகையைச் சார்ந்ததாகும். இக்கீரை உணவுக்காகப் பயன்படுவது மட்டும் அல்லாமல் நம் உடல் ஆரோக்கியத்திற்கும் பயன் தரும் கீரையும் ஆகும்.
- ஏ, பி, சி போன்ற வைட்டமின்களும் தாது உப்பு, மாவுச்சத்து, சுண்ணாம்பு, மணிச்சத்து, புரதம், இரும்புச் சத்து ஆகியவையும் இக்கீரையில் அடங்கியுள்ளன.
- பொன்னாங்கண்ணிக் கீரையைச் சாப்பிடுவதால் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை உள்ள பல்வேறு உடல் உபாதைகள் சீராகும் எனக் கூறப்படுகிறது. இக்கீரையில் இன்னும் பல்வேறு மருத்துவக் குணங்கள் இருப்பதாகவும் சித்த மருத்துவர்கள் தெரிவிக்கிறார்கள்.
- பொன்னாங்கண்ணிக் கீரையில் செய்யப்படும் பொரியல், கீரை மசியல், கூட்டு உள்ளிட்டவை மிகவும் சுவையானதாக இருக்கும்.
- இவ்வளவு சிறப்பும் மருத்துவக் குணமும் வாய்ந்த பொன்னாங்கண்ணிக் கீரையை நாம் உணவில் சேர்த்துக் கொள்வோம். உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துவோம்.

# இந்த இதழ்கள் உங்கள் வீட்டிற்கு வரவேண்டுமா?







உங்களுக்குப் பிடித்த
**ஊஞ்சல், தேன்சிட்டு**
இதழ்கள் உங்கள் வீடுகளுக்கு
நேரடியாக வர வேண்டுமா?

இந்த QR- Code ஐ
ஸ்கேன் செய்து உடனே
சந்தாதாரர் ஆகுங்கள்



Then Chittu Fortnightly Registered with RNI No. TNTAM/2022/82345
Postal Registration No. TN/CH(C)/599/2022-2024
Licensed to Post Without Prepayment No. TN/PMG(CCR)WPP-678/22-24
Published on 01st & 16th of every month
Posted between 01-05 August 2024 Posted at Egmore RMS Patrika Channel
இதழ் 41

# ஆகஸ்ட் 1-15

## பிறந்தவர்கள்

### எம்.எஸ். சுவாமிநாதன் — ஆகஸ்ட் 7



இந்திய வேளாண் அறிவியலாளர் எம்.எஸ்.சுவாமிநாதன் 1925ஆம் ஆண்டு கும்பகோணத்தில் பிறந்தார். 1972 முதல் 1979ஆம் ஆண்டு வரை இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் இயக்குநராகப் பணியாற்றினார். இந்தியாவில் பசுமைப் புரட்சி நடைபெற முக்கியக் காரணமாகத் திகழ்ந்தார். அதனால் இவர் இந்தியப் பசுமைப் புரட்சியின் தந்தை எனவும் அழைக்கப்படுகிறார்.

### பிரக்ஞானந்தா — ஆகஸ்ட் 10



இந்திய சதுரங்க வீரர் பிரக்ஞானந்தா 2005ஆம் ஆண்டு ஆகஸ்ட் 10 அன்று சென்னையில் பிறந்தார். செஸ் கிராண்ட் மாஸ்டரான பிரக்ஞானந்தா 2024ஆம் ஆண்டு வரை உலக அளவில் நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்று பல பட்டங்களை வென்றுள்ளார். 2024ஆம் ஆண்டு வெளியான செஸ் உலகத் தரவரிசைப் பட்டியலில் 8ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். பிரக்ஞானந்தா தனது 10ஆவது வயதில் 2016ஆம் ஆண்டு உலக செஸ் சாம்பியன் வீரரான மாக்னஸ் கார்ல்சனுடன் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

### விக்ரம் சாராபாய் — ஆகஸ்ட் 12



இந்திய விண்வெளித் திட்டத்தின் தந்தை எனப் போற்றப்படும் டாக்டர் விக்ரம் சாராபாய். 1919ஆம் ஆண்டு அகமதாபாத்தில் பிறந்தார். அணுசக்தி ஆணையத்தின் தலைவராகவும் இருந்தார். அறிவியல் துறைகளில் பங்களிப்பு செய்த இளம் அறிவியலாளர்களுக்கு வழங்கப்படும் சாந்தி ஸ்வரூப் பட்நாகர் விருதைப் பெற்றவர். பத்மபூஷண். பத்ம விபூஷண் ஆகிய விருதுகளும் இவருக்கு அளிக்கப்பட்டன.

### சங்கொல்லி ராயண்ணா — ஆகஸ்ட் 15



கர்நாடகாவைச் சேர்ந்த இராணுவ வீரரான சங்கொல்லி ராயண்ணா ஆங்கிலேயர்கள். நிலப்பிரபுக்களுக்கு எதிராகப் போராடினார். விவசாயத்தைச் செழுமையாக்கப் பாடுபட்டார். 1831ஆம் ஆண்டு உள்ளூர் நிலப்பிரபுக்களின் சூழ்ச்சியால் ஆங்கிலேய அரசு ராயண்ணாவைத் தூக்கிலிட்டது. இவரின் வாழ்க்கை திரைப்படமாகவும் வெளிவந்தது.

### குர் தயாள் சிங் — ஆகஸ்ட் 15



ஹரியானா மாநிலத்தில் சண்டினி கிராமத்தில் 1908ஆம் ஆண்டு பிறந்தார். சிறு வயது முதலே சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபாடு கொண்ட இவர். இரண்டாம் உலகப் போரில் இந்தியாவின் சார்பாகப் போரிட்டுச் சிறை சென்றார். ஜப்பான் சிறையில் சுமார் ஆறு ஆண்டுகள் கொடுமைகளை அனுபவித்தார். சுபாஷ் சந்திர போஸின் இராணுவப் படையிலும் பணியாற்றியுள்ளார்.

## சிறப்பு தினங்கள்



### தேசிய கைத்தறி தினம் — ஆகஸ்ட் 7

ஆங்கிலேய ஆதிக்கத்தால் நலிந்துபோன கைத்தறித் தொழிலை மீட்டுக் கொண்டுவரும் நோக்கில், 1905ஆம் ஆண்டு ஆகஸ்ட் 7 அன்று 'சுதேசி இயக்கம்' நிறுவப்பட்டது. இதனை நினைவுகூரும் வகையில் தேசிய கைத்தறி தினம் 2015ஆம் ஆண்டு ஆகஸ்ட் 7 முதல் கொண்டாடப்பட்டு வருகிறது. இதன் வாயிலாகக் கைத்தறித் தொழிலை மேம்படுத்துவதே இந்நாளின் முக்கிய நோக்கமாகும்.

### இந்திய சுதந்திர தினம் — ஆகஸ்ட் 15



200 ஆண்டுகளுக்கும் மேலான ஆங்கிலேய ஆட்சியில் இருந்து விடுதலை பெற்ற நாள் ஆகஸ்ட் 15. அன்று நாடெங்கும் நம் நாட்டின் சுதந்திர தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. மகாத்மா காந்தியடிகளின் அகிம்சைப் போராட்டமே நம் நாட்டின் விடுதலைக்கு வித்திட்டது. பல்லாயிரக் கணக்கானவர்களின் உயிர்த் தியாகத்தால் இந்தியாவின் அடிமை விலங்கு உடைக்கப்பட்டது. அவர்களின் தியாகத்தைப் போற்றும் விதமாகவும் நமது சுதந்திரத்தை மேன்மேலும் காக்கும் வகையிலும் இந்த நாள் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

உங்களுக்கு தேன்சிட்டு
இதழ் பிடித்திருக்கிறதா?
மின்னஞ்சல் : thenchittu@tnschools.gov.in

Publisher & Editor: C. Amuthavalli, Printer: B. Rajkumar, Printed at Rasi Graphics Private Limited, 69-71/A, SIDCO Industrial Estate, Thirumazhisai, Tiruvallur district PIN code – 600124. Published at Tamilnadu Text Book and Educational Services Corporation, EVK Sampath Maligai, No. 68, College Road, Chennai – 600 006.